மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.02/2020
அசல் வழக்கு எண்.395/2012

1. வையாபுரி
2. பெரமகவுண்டர்
3. மயிலி (எ) மயில் ... மனுதாரர்கள்/1 முதல் 3 ம்பிரதிவாதிகள்

/எதிராக/

பழனியப்பன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 02.12.2020 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சசிகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு விசாரணையை மீண்டும் திறக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

கடந்த 03.11.2020ல் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. அன்று 1ம்மனுதாரர்/1ம்பிரதிவாதிக்கு உடல் நலம் சரியில்லாததால் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்க இயலவில்லை. அதனால் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணை நீதிமன்றத்தால்

முடிக்கப்பட்டுவிட்டது. எனவே வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு விசாரணையை மீண்டும் திறக்க கோரி மனுதாரர்கள் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

2) எதிர்மனுதாரர் தாக்கல் செய்த பதிலுருரையின் சுருக்கம்:

1ம்பிரதிவாதி 03.11.2020 ல் நீதிமன்றத்திற்கு வந்தார். ஆனால் நீதிமன்றத்திற்குள் நுழையாமல் நடவடிக்கைகளை மட்டும் கண்காணித்துவிட்டு சென்றுவிட்டார். அன்றைய தேதி அவருக்கு உடல்நலம் சரியில்லாததால் அவரால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியமளிக்க இயலவில்லை என கூறுவது பொய்யாகும். 10.09.2020, 19.09.2020, 07.10.2020, 14.10.2020 ஆகிய தேதிகளில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக போடப்பட்டும் அவர்கள் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்ய முன்வராததால் அடுத்த நிலைக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இந்நிலையில் வழக்கு விசாரணையை நீட்டிக்கும் நோக்கத்தோடு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, ஆவணச் சாட்சியங்களோ எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் கடந்த 03.11.2020 ல் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தரப்பு சாட்சி விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது எனவும், அன்று 1ம்மனுதாரர்/1ம்பிரதிவாதிக்கு உடல் நலம் சரியில்லாததால் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்க இயலவில்லை எனவும், அதனால் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி

விசாரணை நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுவிட்டது எனவும், எனவே வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு விசாரணையை மீண்டும் திறக்க கோரி மனுதாரர்கள் மனுதாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் 1ம்பிரதிவாதி 03.11.2020ல் நீதிமன்றத்திற்கு வந்தார். ஆனால் நீதிமன்றத்திற்குள் நுழையாமல் நடவடிக்கைகளை மட்டும் கண்காணித்துவிட்டு சென்றுவிட்டார் எனவும், அன்றைய தேதி அவருக்கு உடல்நலம் சரியில்லாததால் அவரால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியமளிக்க இயலவில்லை என கூறுவது பொய் எனவும், 10.09.2020, 19.09.2020, 07.10.2020, 14.10.2020 ஆகிய தேதிகளில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக போடப்பட்டும் அவர்கள் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்ய முன்வராததால் அடுத்த நிலைக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது எனவும், இந்நிலையில் வழக்கு விசாரணையை நீட்டிக்கும் நோக்கத்தோடு மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரிய வருகிறது.

(iii) இவ்வழக்கானது பாகபிரிவினை மற்றும் விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளதால் வழக்கினை தகுதிப்பாட்டின் அடிப்படையில் தீர்மானிப்பது இருதரப்பினருக்கும் உகந்தது என்பதாலும், மனுதாரர்கள் இவ்வழக்கில் சாட்சியங்கள் முன்னிலைப்படுத்த ஒரு வாய்ப்பு வழங்கலாம் என்பதாலும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் இம்மனு தாக்கல் செய்துள்ளதால் எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரயத்தை ஈடுசெய்யும் வகையில் ரூ.500/−செலவுத் தொகையாக அளிக்கும்பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ரூ.500/−செலவுத்தொகையாக 10.12.2020க்குள் அளிக்கும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 11.12.2020.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2020 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.